செ.வெ.எண்: 779/2016 நாள்: 07.11.2016

# பத்திரிக்கை செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் ஆமைகள் இனப்பெருக்கம் செய்வதற்காகவும், அவற்றை பாதுகாக்கவும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் முடிய நான்கு மாதங்களுக்கு கடற்கரையிலிருந்து 5 கடல் மைல் (9.2கி.மீ) தூரத்திற்குள் எஞ்சின்கள் கொண்டு தொழில் செய்யும் அனைத்து வகை மீன்பிடி படகுகள் மூலம் மீன்பிடிக்க அரசு தடை விதித்து ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் ஆமைகள் இனவிருத்தி செய்யும் காலங்களான ஜனவரி 1 முதல் ஏப்ரல் 30 வரையிலான காலங்களில் கடல் ஆமைகள் முட்டையிட்டு இனவிருத்தி செய்யும் மீனவ கிராமங்களான கீழமணக்குடி, பள்ளம், புத்தன்துறை, கேசவன்புத்தன்துறை, பொழிக்கரை, பெரியகாடு, ராஜாக்கமங்கலம்துறை, அழிக்கால், கோடிமுனை, கொட்டில்பாடு, மிடாலம், மேல்மிடாலம், இனயம், இனயம்சின்னத்துறை, இரவிபுத்தன்துறை, வள்ளவிளை, மார்த்தாண்டதுறை, மற்றும் நீரோடியில் 5 கடல் மைல் (9.2கி.மீ) தொலைவிற்குள் அனைத்து வகை மீன்பிடி படகுகள் கடற்கரையிலிருந்து கடல் ஆமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மீன்பிடி தொழில் செய்ய கூடாது. மேலும் மேற்கூறப்பட்ட காலங்களில் கன்னியாகுமரி மாவட்ட இழுவலை விசைப்படகுகள் இழுவலையின் குறுகு இறுதிக்கு முன்னதாக கடல் ஆமை தவிர்க்கும் சாதனம் (Turtle Excluder Device) பொருத்த வேண்டும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கலாகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்,
(இருப்பு) நாகர்கோவில்.

மீன்துறை துணை இயக்குநர்,
(மண்டலம்) கன்னியாகுமரி,
(இ) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.